உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சந்திகை. ௰௨.] ௧௮௪௧ ௵. ஆனி. ௰௭. திகதி. வியாழக்கிழமை. Thursday, June 17, 1841. [No. 12.

வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவையைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும்.

அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசும் கூடினதாயும், எட்டுப் புறமுள்ளதாக நாலாய் மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, ௨ பென்சு அல்லது ௰௬. வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இதிற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்தம் பணம் முன்னறக் கொடுத்து வைத்து, மறு பெயருக்குச் செலவிடக் கூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு, ௧½. பென்சு அல்லது ௧. பணம். அல்லது மூன்றுமாதத்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால் விலை, ௯ பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னறக் கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன் விலை பத்திரம் ஒன்றுக்கு ௧. பென்சு, அல்லது அ. வெள்ளைச் சல்லி. மூன்றுமாதத்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தவாற்செலவை விட.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவைகளை உதய தாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித் தவாற்செலவுகொடுத்தனுப்பவும்.

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; CHUNDICOLY—M. J. Povirrayasingem; POINT-PEDRO—A. Holmes; CALPENTYN—J. Woodhull; TRINCOMALIE—Rev. C. Hole; COLOMBO—Philip Canjimanadan; KANDY—Rev. W. Oakley; MADURA—Rev. F. D. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence; TANJORE—Rev. T. Brotherton; MADRAS—P. R. Hunt, Esq.

புங்குடுதீவு.—பரமா நாகநாதபிள்ளை.

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 78.]

இந்து தேசச் சரித்திரம்.—*Trees.*

சந்தனமரம் (Sandal-wood tree or the santalum album of Linnaus,) இந்தியராலும் ஐரோப்பியராலும் அதன் வாசனைக்காக மிகவும் அதிகப்பட்டிருக்கின்றது. மிகவும் நேர்த்தியும் அதிக வாசனையுமுள்ள சந்தனமரம் இந்துதேசத்தின் மேற்குப் பகுதிகளில் இருந்து கொண்டுவரப் படுகின்றது. இம்மரம் வெகு காலத்துக்கு நின்று முதிர்ந்து போம்பொழுது அடிமரத்தின் நடுப்பக்கு மஞ்சள் நிறமாயும புறப்பக்கம் பெலனற்றதும் வெண்மையும் வாசனை அற்றதுமாய் இருக்கும். அதிலும் மஞ்சள் நிறமான உட்பக்கம் அதிக வயிரமுள்ளதும் மிகுந்த வாசனை உள்ளதுமாய் இருக்கும். இந்தியரின் பழைய நூல்களில் இம்மரத்தைப் பற்றிப் பாடப்பட்டு இருக்கின்றது. சங்கிருதத்தில மூங்கில்கள் (Bamboos, or Bambusa arjnacea,) ஒன்றோடொன்று உரோஞ்சி நெருப்புப்பற்றும்பொழுது சந்தனமரங்கள் இட்டிருந்தால் மோசம உண்டாகும் எனப் பாடப்பட்டிருக்கின்றது.

தேற்றுமரம் (Strychnos potatorum or the clearingnut tree,) மட்டான உயரமுள்ளதும், மலையடுத்த இராச்சியங்களில மிகுதியாய் உண்டாகிறதும, அதின் பழங்கள் பழுப்பான கருமையுள்ளவைகளாயும இருக்கும். டிராக்ஸ்பாக் என்பவர் அவைகளினால் உண்டாகிய பிரயோசனத்தைப்பற்றிச் சொல்லுகிறதாவது, பழங்களுக்கு உள்ளிருக்கிற கொட்டைகள் காய்ந்த பிறகு தண்ணீரைத் தெளிவாக்கும்படியாகக் கடைகளில விற்கப்படும. இந்தியாக் கிணறுகளில உள்ள சுத்த சலத்தைக் குடிக்கக் கிடையாமல் ஊறணி கம்மா, வாய்க்கால், ஆறு முதலியவற்றிற் பாய்கிற மண்டித் தண்ணீரைக் குடித்துவருகிறார்கள். இதைக் குடித்து வந்தால் வியாதி உண்டாகும், தண்ணீரிற் சேறு, மண் முதலியவைகள் இல்லாமற் தெளிக்கும்படி ஒரு தேற்றுங்கொட்டையைத் தண்ணீர் இருக்கிற குடத்தில் அல்லது பானையின உட்பக்கத்தில் இரண்டொரு நிமிஷத்துக்குத் தேய்க்கக் கொஞ்ச நேரத்தின்பின் தண்ணீர் தெளிய உள்ளிருந்த மண் சேறு முதலியவைகள் கீழே ஒரு பக்கத்தால் அடைந்துபோம். மேலும் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு இடத்திலுங் கிணறுகள் உண்டு. சலமும்மெத்தச் சுத்தமாய் இருக்கும. பற்பல குளங்கள் இருந்துஞ் சனங்கள் அவைகளிலுள்ள தண்ணீரைக் குடிக்கமாட்டார்கள். ஏனென்றால் ஒவ்வொரு இடத்திலுஞ் சுத்தசலமுள்ள கிணறுகள் இருக்கும்பொழுது குளங்களில் மண்டித் தண்ணீரைக் குடிக்கப் பிரியப்படார்கள். ஆகையாற் சலத்தைத் தேற்றவேண்டியதில்லை. அன்றியுந் தேற்றுங் கொட்டை மருந்துப் பண்டமாய் இருக்கின்றது.

செண்பகமரம் (Magnolia insignis or the Tchambaga tree,) வாசனையுள்ள புட்பங்களைக் கொடுக்கும் மரங்களிலொன்று. வாலிக் (Dr. Wallick,) என்பவர் இந்துதேசத்திற் பிரயாணம்பண்ணுகையில் இவ்வினமான மரங்களை நேபாளநாட்டின் பெரியபள்ளத்தாக்கிலுஞ் சங்கூ (Sankoo,) என்றவிடத்திலுஞ் சீயோபர் என்ற மலையின சிகரங்களிலும் (Sheopur Mts.,) கண்டார். செண்பகமரம் மிகவும்பருத்தது. அடிமரம் அஞ்சடிச்சுற்றுபிருக்கும். நுனிமரத்தில் நிரம்பப் பூக்கள் பூத்து மலர்ந்திருக்கும்பொழுது அதைக்காண்கிற ஒவ்வொருவனுந் தான் கண்டுவந்த எல்லாமலரிலுஞ் செண்பகமலரும எல்லாமரத்திலுஞ் செண்பகமரமும்மே அதிகசிறப்பானதென்று நினைக்க இடமுண்டு. செண்பகப்பூ மஞ்சள் நிறம். பெரிதும் வாசனை உள்ளதும அதிகசிறப்புள்ளதுமான மஞ்சள் வர்ணப்பூக்கள் பச்சைநிறம் உள்ள இலைகளுக்குள்ளே ஏராளமாய் மலர்ந்திருக்கிறதாகக் காணப்படும். இவ்வகை மரங்கள் பிரித்தானியாதீவின (Great Britain,) தேசசுவாத்தியத்துக்கும் நிலத்துக்கும் ஏற்றிருப்பதால நன்றாய் உண்டாகும. செண்பகப்பூக்களை இந்திய இஸ்திரிகள் தங்கள் கொண்டையில் அணிந்திருக்குஞ் சிறப்பை வன்னித்து வேத சங்கிருதப் புலமைகளிற் பாடப்பட்டு இருக்கின்றது. நீலவண்ணமலரை உள்ள செண்பகமரம இந்து தேசத்தில உண்டாகிறதாக அறிகிறோம். ஆகிலும் பிராமணர் இம்மரங் கயிலாயகிரி, அமராவதை முதலிய மோக்கமண்டலங்களிலே அன்றி அவ்வுலகத்தில் இல்லையெனச் சொல்லிச் சாதித்து வருகிறார்கள்.

கடுக்காய் (Gall-nut tree, the Terminalia Chebula of the Combretaceæ species,) வடசருக்காரில மலைப்பக்கங்களில மிகுதி. அது ஒருபெரியமரமாயும் நுனிமரம் மிகவும் விசாலித்ததும நிழலுள்ளதும பசுமையானதுமாய் இருக்கின்றது. அதின பழம் மஞ்சள்நிறமுள்ளதும் புறாமுட்டையளவு பருப்பமும் முட்டைவடிவம் உள்ளதுமாய் இருக்கின்றது. மரம் பெரிதானதும் வயிரித்ததும நெடுநாளைக்கு இருக்கக்கூடியதுமாய் இருக்குது. ஆகிலுங் கடுக்காயின் மேற்தோல கயர்ப்புள்ளதாய் இருப்பதால் அதிக பிரயோசனமுள்ளது. சித்திரைகள் முதலியபுடைவைகளிற் பலவிதவர்ணமெழுதுபவர்களுஞ் சாயக்காரரும் இலைகளிற் கடுக்காய்த் தோலிற் கயர்ப்பினாற் காரம போடாமற் தங்கள் அலுவல்களை நடத்திக்கொள்ள மாட்டார்கள்.

Digitized by Google

அன்றியும் இலைகளிருக்கிற ஓர்விதப் பிச்சைச் சனங்கள் விற்று வியாபாரம் பண்ணுவார்கள், அது மஞ்சள்வன்னச் சாயத்துக்கு ஏற்றது. கடுக்காய்சேர்ந்து உண்டாகிறமை ஐரோப்பின் மையைப்பார்க்க இந்துதேசத்துக்கு மிகவும் ஏற்றது. வேறொருவிதமான கடுக்காய் (Terminalia Vernix,) சீனதேசத்தில் உண்டாகிப் பேர்பெற்ற மினுக்கெண்ணெய் (Chinese Varnish) ஓடே சேருகின்றது.

தென்னமரத்தைப்பற்றிச் சுருக்கமாய் முன் காட்டப்பட்டிருக்கின்றது. ஆகிலும் அதினால் உண்டாகிற நன்மையைப்பற்றிச் சொல்லவேண்டியிருக்கின்றது. இத்தினங்களாகிய பனை, கமுகு என்பவைகளுக்குட் தென்னமரம் அதில் விலைபெற்றதாய் இருக்கின்றது. எப்படியெனில் தென்னமரத்தில (௱) வகையான பிரயோசனங்களுண்டு அவைகளில் (௯௯) இனமான பிரயோசனங்கள் சனங்களுக்குத் தெரிந்திருக்கின்றன. நூறும் பிரயோசனம் இன்னந் தெரியவில்லையென்பதைப்பற்றி ஒரு பழமொழி இந்தியருக்குள்ளுண்டு. அது பொய்த்துப் போகவில்லை. நூற்றுக்கணக்கான பிரயோசனங்கள் இம்மரத்திற் கண்டிருக்குது. இம்மரம் அறுபதடி துவங்கி நூறடியளவு உயரமுள்ளதும் ஒன்று அல்லது இரண்டடி சுற்றுள்ளதுமாயிருக்கின்றது. நுனிமரத்தில் ஓலைகள் கூட்டங்கூட்டமாய் எழும்பிப் பரந்து நிற்கும். மட்டையுஞ் சேர்த்து ஓலையின் நீளம் பதினலடி. இம்மட்டையின் இருபுறத்திலும் ஓலைகள் சரிநெருக்கு முளைத்திருக்கும். இவ்வகை மரங்கள் கடற்கரையோரங்களில் அல்லது தீவுபற்றுகளில் வைத்துண்டாக்க வெகு சுறுக்கெழும்பிச் செழிப்பாய் வளரும். தென்னந்தோப்புகளைப்போற் சிறப்பான தோப்புகள் ஒன்றுமில்லை. ஒவ்வொரு வரையிலும் முளைத்தெழும்புகிற ஓலைகள் விழுந்துபோக மரமோ தூண்களைப்போல ஒருநெருக்கு வளரும். சிறிது மரம் நெருக்கத்தினால் விலகி வளைகிறதுமுண்டு. தென்னமரம் மாதமொரு முறை பூக்கும். ஒரு வருஷத்தில தென்னம் பாளைகள் பன்னிரண்டுக்கு மேற்படாது. பிஞ்சும் பூவும ஒரே நேரத்திற் காணப்படும். குருத்தோலைகளினாற் பன்ன வேலைகள் செய்யலாம். அடிமரங்கள் துலாவுக்கேற்றதுமல்லாமல் தண்ணீர் பாயும்படி பீலிக்கும் ஏற்றது. ஒவ்வொரு ஓலையின்கீழும் பன்னாடை சுற்றிக்கொண்டிருக்கும. இப்பன்னாடைகள் பல தேசங்களிற் சிறுபிள்ளைகளுக்குத் தொட்டில மெத்தையாக இருப்பதுமல்லாமல் அதில உள்ள பஞ்சை நூற்று, இரட்டுகள், கம்பளங்கள் நெய்கிறார்கள். உள்ளிருக்குந் தென்னங் குருத்தைச் சனங்கள் தின்பார்கள் தென்னோலைகள் வீடுவேய்கிறதற்கு ஏற்றவைகளுமல்லாமற் கிடுகுகள், குடலைகள், கூடுகள் பின்னுவதற்குங் கூடும. கிடுகுகள், வேலி அடைப்பதற்கு ஏற்றது. தென்னம் பாளைகள் சூழ்முதலியவற்றிற்குக் கூடும். அன்றியும் இலங்கைத்தீவிலுள்ள வன்னிப்பற்று முதலிய காடுகளில் யானைகள் மிகுதி. அவைகள் பச்சை ஓலைகளைக் கண்டால் மெத்த ஆவலுடனே தின்னும. தேங்காய்த் தும்புகளைக் கயிறுகத் திரித்துப் பலவிதமாய்ப் பாவித்துக்கொள்வார்கள். தென்னந் தும்பினால் விளக்குமாறும், மெத்தையும் செய்வதுமுண்டு. பாளையையும், பூவையும் இறுகக் கட்டி அதிலிருந்து சான்றோர், நளவர் கருப்பநீர் சேர்ப்பார்கள். * இந்நீரைப் பற்றிப் புலவர்களில் ஒருவர் மிகவுஞ் நேர்த்தியாய் எழுதியிருக்கிறார். அந் நீர்தானே கள்ளாகி மறுபடி சாராயமாகிறது. இச்சாராயத்தைக் குடிப்பது மெத்த அவத்தம வெறிகொள்ளப்பண்ணும். நெடுகவுங் குடித்து மட்டுக்குமிஞ்சிப் பாவித்துவந்தால் மரணத்துக்கேதுவாக்கும். இதொன்றே தென்னமரத்தில் இருந்துண்டாகிற பொல்லாங்கு. இவ்வகைச் சாராயம இலங்கையில ஒரு வருஷத்திற் பதினாயிரக்கணக்கான பணங்களை விழுங்கிப்போடுகிறது. இதில் தென்னங் கற்கண்டு கருப்புக்கட்டி முதலியவற்றைச் செய்து வியாபாரம்பண்ணுவது வழக்கம். தேங்காயினது அருமையும, பலனும், விலையுந் தென்னமரம் மிகுத்திருக்கிற இடங்களில் விசாரித்தாற் தெரியும். இளநீர் தாகத்தையும பசியையுந் தீர்க்கக்கூடியது. தும்புகளினாற் பெரிய வடங்கள் செய்து தோணிகள், சலுப்புகள் முதலியவற்றில வேலை செய்வதற்குத் தேர்கள் இழுப்பதற்கும இன்னும் மற்றும் பிரயோசனங்களுக்கும ஏற்படுத்திக்கொள்வார்கள். உலாந்தாக்காரர (Dutch) இலங்கைத் தீவை ஆண்டபொழுது மார்சல (Mr. Marshall) என்பவருடைய கணக்கின்படி ஒரு வருஷத்திலே (௧௰) இலட்சம இறாத்தல்கொண்ட கயிறு வாங்கிப் பிரயோசனப்படுத்திக்கொள்வார்கள். தேங்காய்களில் இருந்து எண்ணெய் வடித்து வருஷந்தோறும் மறு தேசங்களுக்குச் சாடிகளில் ஏற்றி அனுப்புவார்கள். அதினால் உண்டாகிற பலனுமோ மிகுதி.

(இன்னும் வரும்)

* "Stretch'd amid these orchards of the sun,
Where high palmettoes lift their grateful shade
Give me to drain the cocoa's milky bowl,
And from the palm to draw its freshening wine;
More bounteous far than all the frantic juice
Which Bacchus pours."

கூட்டென்பவர் செய்த பிரபஞ்ச நூல்.

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

முதற்பிரிவு.—௰௧. அதிகாரம்.

சீரணம், வித்தியாசமான விலங்குகளின் வேறுபாடான போசன இவை முதலியவற்றைப்பற்றி.

௧. சகல மிருகங்களுக்கும் ஒரு உட்குழி அல்லது இரைப்பை உண்டு. அதிலே தின்றதின் சீரணித்துச் சத்தமென்றுசொல்லப்படும் வெள்ளை வண்ணிலாகின்றது. இது இருதயத்திற்குச் சென்று பித்தங்கொண்டோடி என்னும் பலபல சிறு குழல் நரம்புக் கூட்டங்கள் வழியாய் இரத்தமாகின்றது.

௨. மூலாக்கினியென்னுஞ் சீரணநீர் இரையைச் சீக்கப்பண்ணுவதிற் பிரதான தொழிலை நடப்பிக்கின்றது. இது உருபொழியுள்ள மெல்லியநீராய் உவர்ப்புள்ளதும், மணமில்லதுமாய் இருக்கின்றது. இது அதிக வயிரிப்பான பதார்த்தங்களையுஞ் சீரணிப்பிக்கின்ற தத்துவமுள்ளது. என்புகள், கற்கள், மரமூலங்கள், யா[illegible]த்தந்தம், பொன், உருக்கு இவைகளெல்லாம் இதினாற் சீரணிக்கப்படுகின்றன. ஆகிலும் எல்லா இரைப்பையும் சரிவந்த முயற்சியுந் தத்துவமுமுள்ள சீரணநீரை உடையனவல்ல. ஒரு மனிதன் மடக்குப்பிடிக்கத்திகளை விழுங்கி அவைகளிலுள்ளபிடிகளுங், கத்தியலகிற சிலபகுதியுஞ் சமித்துப்போகிறவரைக்குஞ் சிலவருடக் காலமாகப் பிழைத்திருந்தானென்று அறியப்பட்டது. அப்படிப்பட்ட வயிரித்த உணவுகளைத் தின்று சீவிக்கத் துணிவது நல்லதல்ல.

௩. மனிதனிலே இரைப்பை பிரிவுச்சவ்வுக்கு இடப்புறமாயிருக்கின்றது. அது உருவத்தில் ஊதுவாத்தியத் துருத்தியைப்போல் இருக்கின்றது. அதின் இடது[illegible]ணி பெரிதாயும், மேற்பக்கம் உட் குழியும் கீழ்ப்பக்கந் திரண்டதாயும் இருக்கின்றது. இரையை வாங்கு[illegible] தங்கக்குகிறதுமான இரண்டு துவாரங்களும் அதின் மேற்புறத்தில் உண்டு. அது வெவ்வேறான மூன்று அடுக்கு அல்லது படையினால் உண்டுபட்டதாய் வெளிப்படையும் உட்படையும் ஒருவகைத் தோலாகிய மெல்லிய [illegible]ருமச்சவ்வென்று சொல்லப்படுகின்றது. இடைப்படை தசைக்கட்டுள்ளதாய் இருக்கின்றது.

௪. இரைமீட்கிற அல்லது அசைபோடுகிற மிருகங்களுக்கு ஒன்றுக்குமேற்பட்ட இரைப்பைகள் உண்டு. ஆட்டுக்கும் மாட்டுக்கும் நான்குண்டு. இவை இரைமீட்கிறவைகளும் அவ்வேளைகளில் மிகவும் அமைச்சலும் சுவாத்தியமுமுள்ளவைகளுமாய் இருக்கின்றன.

௫. குதிரையுங் கழுதையும் இதற்குமாறாக மாட்டைப்போற் புல்லைத்தின்றாலும், ஒரே இரைப்பையுள்ளவைகளாய் இருக்கின்றன. இந்த மிருகங்கள் மிகுந்த வேலைக்கென்று உண்டாக்கப்பட்டபடியால் மூன்று நாலு இரைப்பை உண்டானாற் பருத்துப் பள்ளைப்பாய்த்துபோ

Digitized by Google

௫. இவ்விதமாய் ஒவ்வொரு மிருகமும் அதனதன் நிலைக் ...ந் தொழிலுக்கும் ஏற்றதாக்கப்பட்டிருக்கின்றது.

௬. நாம் அறிந்த நிலம்வாழ் சாதிமிருகங்களுக்குள் தீய்க்குருவி இரைசமிக்கிறதில் மிகவும் அதிசயிக்கத்தக்க த...துவமுள்ளதாய் இருக்கின்றது. அது கல், பளிங்கு, ...ரும்பு, தோல், சதுரக்கள்ளி, ஆம் தனக்கு அகப்ப...கிறவெதுவையுந் தின்னும். இந்த விம்மிதமான சிரு...டி பட்சிசாலத்துக்கும் மிருகசாலத்துக்கும் இடைநி...யாய் இருக்கின்றது. அதற்குப் பட்சிக்குப் போல ...சிறகும் இறகுமிருந்தும் பறக்கிறதில்லை. அதின் பொ...துத்தோற்றத்திலே ஒட்டையைப் போலிருக்கின்றது. அ...து பன்றியைப்போல் உறுமும். அதைப் பிடித்துப்ப...க்கிக் குதிரையைப்போல் ஏறித்திரியலாம்.

௭. போதூரில் வருத்தகசாலையிலுள்ள ஒர் துரையிடத்...தில் நன்றாய்ப்பழகி ஆள் ஏறிப்போகத்தக்க இரண்டு தீ...ய்க்குருவிகள் இருந்தன. அவைகளில் அதிக பலமுள்ள...து இளசாயிருந்துந் தன் முதுகிலே இரண்டு காப்பிரி...களைச் சுமந்துகொண்டு பந்தயக்குதிரையிலும் அதிக ...தியாய் ஓடும்.

௮. கழுகு இராசாளி இவற்றைத்தவிரப், பட்சிகள் ...பெரும்பான்மையும் மாங்காயென்று சொல்லப்படு...ந் தசைக்கட்டான இரையை உள்ளவைகளாய் இருக்கி...ன்றன. வீட்டிற் சஞ்சரிக்கும் பட்சிகளுக்குள்ளது அ...து தான். அந்த மாங்காய், பட்சி விழுங்கும் எப்பொரு...ளையும் அரைக்கவுங் கரைக்கவுந் தக்க மிகுந்த பலனுள்...ளதாய் இருக்கின்றது.

௯. அட்டை, வாற்பேத்தை, பலவகைமீன் முதலா...ன சிலமிருகசாதிகள் தண்ணீரில் மாத்திரம் வாழுகின்ற...ன. வெண்ணியாக்கோட்டை என்னும் ஒர் மீன் இரை...யின்றி மூன்று வருடஞ் சுத்த சலத்தில் விடப்பட்டிருந்...தது, அதின் முடிவில் அது விட்டுநின்ற வீதமறு அளவு...க்கு வளர்ந்துவிட்டது.

௰. தேனீ, சில்விட்டான் குருவி, வண்ணாத்திமுதலா...க மற்றுமுள்ள பூச்சிகள் மலர்த்தேனையும் வாசனையை...யும் உண்டு சீவிக்கும். நத்தைகளும், அறணைகளுங், கா...ற்றைக்குடிக்கின்றன. சிலந்திப்பூச்சிகள், வண்டுகள், தே...ரைகள், முதலான பல சீவிகள் காற்றைமாத்திரங் குடி...த்து வருடங்களாகச் சீவிக்கின்றன. இவைகளில் ஒன்றிற்...கும் இரைப்பை வேண்டியதில்லை.

௰௧. கிழமைகளாகவுஞ் சில மாதங்களாகவுந் தண்...ணீர் மாத்திரங் குடித்துக்கொண்டு சாப்பாடில்லாமற் ...சில மனிதர் சீவித்ததுண்டு. பதினாறு பிராயமுள்ள ஒ...ரு பெண் தகப்பன் இறந்துவிட்ட மிகுந்த கவலையிலா...ழ்ந்து அவளுடைய தசைக்கட்டெல்லாந் திமிர்த்துப் ...போனதினால் ஐம்பத்துநாலு நாளைக்கு யாதொன்றும் ...அவளுடைய மிடற்றிலே இறங்காமற் போயிற்று. அக் ...காலத்திலே தனக்குப் பசி தாகந் தோற்றவில்லையென்று ...சுகமடைந்ததின் பின் சொன்னாள். அவளுடைய சடம்...மெத்தக்கேவலமாய்த் தோற்றவில்லை.

௰௨. இக்காரியங்கள் மிகவும் அன்னியமாயிருக்கின்றன. ஒரு மனிதனைச் சீவனுடனே காக்கும்படி வாய்வுந் தண்ணீரும் எப்படி உதவிச் செய்கின்றனவென்று நமக்கு விளங்கக்கூடியதல்ல. மனவிஷயத்திற்போல சடப்பொருளிலும் நாம் இன்னம் விசாரித்து அறியாதவுஞ் சகலத்தையும் படைத்த கடவுள் தம்முடைய ஆவியினாலே வெளிப்படுத்தினாலல்லாமல் நாம் ஆராய்ந்து ஒருபொழுதிலும் அறியக் கூடாதவும் அநேக இரகசியப் பொருள்கள் உண்டு. ஞானத்தை நேர்மையுடனே தேடுகிறவர்களுக்குக்கொடுப்போமென்று பராபரன் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

[The following article is the original of the foregoing.]

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

On digestion, and the different kinds of food employed by different animals, &c.

PART I.] [CHAPTER. XI.

1. ALL animals have an internal cavity or stomach; in this the food, when swallowed, is digested or dissolved into a kind of paste, of a milky appearance, called chyle. This chyle is then conveyed to the heart, to be made into blood by different sets of vessels, or little tubes called lacteals.

2. The gastric juice is the chief agent in digestion. This juice is a thin transparent fluid, a little saltish, and destitute of smell. It has the power of dissolving the toughest substances; bones, stones, roots of trees, ivory, gold and steel have all been dissolved by it. But all stomachs do not have this gastric juice equally active and powerful; and thus a man has been known to swallow clasp-knives, and lived years after, till the handles were all dissolved, and a part of the blade. It would not be well to attempt living on such hard food.

3. In man, the stomach is situated on the left side of the midriff; in its figure it resembles the pouch of a bagpipe; its left end is largest; its upper side is concave; its lower, convex; and the two openings for receiving and discharging the food are both on the upper side. In its substance, it consists of three distinct coats or layers; the outer and inner layers are both called membranes, that is, a kind of skin; the middle layer is muscular.

4. All animals which ruminate, or chew the cud, have more stomachs than one. Sheep and oxen have four; these chew the cud, and they always look very calm and satisfied when thus employed.

5. The horse and ass, on the contrary, though they eat grass like the ox, have only one stomach: these animals are formed to be active, and three or four stomachs would make them too large and clumsy. Thus every creature is prepared for its own station and duties.

6. The ostrich has the most wonderful powers of digestion of any land animal with which we are acquainted. It swallows stones, glass, iron, leather, prickly shrubs, indeed every thing that falls in its way. This strange creature seems to be the connecting link between birds and beasts. It has wings and feathers like a bird, but it does not fly; in its general appearance it looks like the camel; it grunts like the hog, and it can be tamed and ridden like the horse.

Digitized by Google

7. A gentleman, at the factory of Podore, had two ostriches carefully trained and taught to carry a rider. The strongest of these, though young, would carry two negroes on his back, and then run faster than a race horse.

8. Birds, in general, with the exception of eagles and falcons, have a muscular stomach, called a gizzard. All our domestic fowls have the same, and this gizzard has prodigious power, grinding and dissolving every thing which the fowl swallows.

9. Some tribes of animals live on water alone, as leeches and tadpoles, and various kinds of fishes. A silver-fish was kept for three years in pure water, without being fed, and at the end of that period it had grown as large as the glass globe that contained it.

10. The bee, humming bird, butterfly and many other insects, live on the nectar and odour of flowers. Snails and cameleons live on air, and spiders, beetles, and toads and many other creatures have been known to live years on air alone. None of these animals have much need of a stomach.

11. There have been instances of persons living for a number of weeks, even months, without food, but they generally drank water freely. In one case, however, a beautiful young lady of sixteen was so overcome with grief for the loss of her father, that her muscles became rigid, and she could not swallow for fifty-four days. She said, after her recovery, that she had no sense of hunger or thirst; and she did not lose much flesh.

12. These things seem very strange. We cannot understand how the air or the water should nourish and keep alive a human being. There are many mysteries in matter as well as mind, which have not been searched out, and which we never shall know till that God who made all things shall, by his Spirit, reveal them unto us. He has promised to give wisdom to all who sincerely seek it.

From Williams' Missionary Enterprizes in the South Seas]

தென்சமுத்திர தீவுகளில் நடந்த சங்கதிகள்.

எங்கள் சிநேகிதனுன (விறிம்) துரையுடைய கப்பல் இங்கிலாந்துக்குப் போகையில் இராயத்திரியாவிற் சேர்ந்தது. அவ்வூர்க்கிறிஸ்தவர்கள் தங்கள் ஊர்ப் புரோசனங்களிற் சிலவற்றை இலண்டன் மிசியோன் சங்கத்தாருக்குக் கொடுத்து, அதினுல் உலகத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்றெண்ணி, தேங்காய் எண்ணெய்யைச் சாடிகளில் நிரப்பி அச்சுப்பலகைகளில் அனுப்பினார்கள். கப்பல் இங்கிலாந்திற் சேர்ந்தபோது கனம்பொருந்திய தேசாதிபதியாகிய சம. சாட்சு என்றவர் இதுசெய்தியைக் கேள்விப்பட்டு, எண்ணெய்யின் பேரால், கோவறனமேந்துக்குத் திரமானமாயிருக்கிற (சாபவுனை)யும் வாங்காமல் அந்தச்சங்கத்துக்கு விட்டுவிட்டார். ஆதலால் இந்தத் தீவார் வழியாற் சங்கத்துக்கு (தூஅா) பவுன் சேர்ந்தது.

மேலும் இந்தக் கைப்பித்தான் (ஆகூறு)வையும் அவனோடுகூடிய சனங்களையும் அவர்கள் தீவிற் சேர்த்துவிடும்படி கேட்கப்பட்டபொழுது அவரும் அதற்குத் தடைசொலலாமற் சம்மதித்தார். நாங்களும அத்தீவாருடைய நிலைமையினதென்று அறிந்தும் மறுசெய்தி எங்களுக்குக் கொண்டுவர ஒரு தோணியில் இந்தத் தீவாரிற் சிலரை அனுப்பினோம்? அப்படியே (ஆகூறவையும) அவன் மனைவியையும் அவாகள் கூட்டத்துடனே வழிவிட்டனுப்பகையில் (ஆகூறு) என்பவன் வெளிச்சமில்லாமல் இருளான நாட்டிற் செல்லக்கூடுமாவென்று கேட்டான். அதினுற் சுவிசேஷத்தைத் தன் ஊரவர்களுக்கு அறிவிக்கக்கூடிய சிலா தனனுடனே போகவேண்டுமென்பது அவசியமென்று காட்டினுன். உடனே நாங்கள் சபையைக்கூடிவரச்செய்து (ஆகூறு) விருப்பம் இதுவென்று சொல்லி அஞ்ஞானிகள் இருக்கிற (உருத்தர) தீவுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் படிப்பிக்கும் உவாத்திசாகப்போகவிரும்புகிறவர்கள் உங்களில் ஆருமுண்டாவென்றுவினு எங்கள் சபையில் முதற்றரமான சபையின் மூப்பர் இரண்டுபேர் முமபி முன்னேறிவந்து இங்கே நாங்கள் இருக்கிறுமே, எங்களை அனுப்புங்களென்று தீர்க்கதரிசிகளில் ஒருவர் சொன்னபிரகாரஞ் சொன்னுர்கள். அவர்களை அவ்வேலைக்குத்தெரிந்தபின், அவர்கள் புறப்பட முதல்நாள் இராவிற் தேவையான சாமான்களைச் சபைத்தார்கள். சபையார் இவர்கள்பேரிற்கொண்ட பட்சத்துக்கு அடையாளமாக ஒவ்வொரு சௌமுக்கத்தியையுங் கச்சுச்சீலைகைத்தரிக்கோலையும் இப்படியே ஒவ்வொருவருந் தங்களாற்கொடுக்கக்கூடிய பிரயோசனமான தளபாடங்களையுங் கொடுத்தார்கள். நாங்களும் மூலபாடங்கள் அடங்கிய சில புத்தகங்களையும (தகத்தியதீவுப்பாஷையிலே அச்சுப்போடப்பட்ட சுவிசேஷங்களையுங் கொடுத்து அவர்கள் பிரயாணத்தை மூஸதிப்புப்பண்ணி அனுப்பினோம்.

ஒருமாதஞ் சென்றபின் நாங்கள் அனுப்பின தோணி அந்த(உருத்தர) தீவிலுள்ள விக்கிரகங்களை ஏற்றிக்கொண்டு வந்தது. சுயாதனத்தின் பிரபு என்பவர் இரத்தஞ்சிந்துதலில்லாமல அஞ்ஞானதேவர்களை வெற்றிகொண்டாரென்று கண்டோம். மேலும் அவர்களனுப்பின காகிதத்தை வாசித்து அவர்களாலே தள்ளுப்பட்டு வந்த விக்கிரகங்களையுங் கண்டபொழுது,"இவ்வுலகத்தின் இராச்சியங்கள் எங்கள் பரமபிதாவுடையதும் அவருடைய குமாரன் யேசுக்கிறிஸ்துவினுடையவும் ஆயின" பாரபரனுடைய தூதர் ஆர்ப்பரித்துச் சத்தோஷித்தது போல மிகுதியாய்க் களிகூர்ந்தோம்.

இக்காரியங்களைச் சபையாருக்கு அறிவிப்பதற்காகவும் ஆண்டவருக்காக நாங்கள்பட்ட பிரயாசத்தை அவர் ஆசீர்வதிப்பதற்காகவும நன்றியுள்ள வணக்கஞ் செலுத்துதற்காகப் பெரியகோவிற் கூட்டம் வைக்கப்பட்டது. அன்றிரவிலே அதிக திறமாய் எரிகிற நூதனமான தட்டு விளக்குகள் கொளுத்தப்பட்டிருந்ததினுலே சனங்கள் பிரமிப்படைந்தார்கள். அன்றி க்கூட்டத்திற் சனங்களுக்குத்திறமாய்த் தெரியத்தக்கதாகப் பிரசங்கக்கூட்டில நின்று விக்கிரகங்களெலலாம் ஒவ்வொன்றுய்க் காட்டப்பட்டன. விக்கிரகங்கள் எல்லாவற்றிற்குள்ளும (அ)என்னப்பட்ட(உருத்தர)தீவாரிகுல தேவனை எல்லாருங் கவனமாய்ப் பார்த்தார்கள். ஏனெனில அந்தப பெரிய உருவின் முதுகுப்பாட்டிலே இளையாய்ச் சிறு தேவர்கள் உருக்கி வார்த்து இணைக்கப்பட்டிருந்தன. அதுவுமலலாமல அந்தப்புறத்திலே ஒரு வாசல் இருந்தது. அதைத் திறந்தவுடனே அப்பெரிய திருவுருவுக்குள் (உய. உடு)க்கு மேற்பட்ட சிறுவுருக்கள் இருந்தன. அவைகள் இவர்கள் காணத்தக்கதாய் வெளியாய் எடுத்துப்போடப்பட்டன. (உருத்தர) தீவார் இத்தேவன் தங்களுக்கு முற்பிதாவென்றும இவா இறந்தபின் தேவனுனுரென்றுஞ் சொல்லுகிறுர்கள்.

இச்சமயத்தில் (இராயத்திரியா தீவிற்) சிலர், விருப்பமான பல காரியங்களை எடுத்துப் பேசினுர்கள். அவர்கள் பேசின காரியங்களின் பொழிப்பு இன்னதென்று காட்டும்படி இரண்டுபேர் பேசின பேச்சை எழுதுகிறேம். எங்கள் சபையின மூப்பரில் ஒருவனுகிய (தாகுனி) பேசினதாவது,

"இப்படியே கைகளாற்செய்யப்பட்டதேவர்கள் அழிந்துபோவார்கள், அவைகள் கயிறுகளாற் கட்டப்பட்டிருக்கின்றன. ஆம், தேவர்கள் என்னப்பட்ட அவர்களுடைய முந்தின நாமங்கள் இப்பொழுது பொல்லாத ஆவிகள் என்று சொலலப்படுகின்றன. அவைகளின் மகிமையையோ பாருங்கள். அவைகள் சுறுக்காய் உதிர்ப்போம் பட்சிகளின் இறகுகளுக்கு ஒப்பானவனமாய் இருக்கின்றன. ஆனாலும் எங்கள் மெய்யான தேவனே மாறுபடாதவராய் இருக்கிறுர்."

(தாமுதா) என்னப்பட்ட அவ்வூரின் இராயன் பேசின பேச்சாவது, "குருடர் காணவுஞ் செவிடர் கேட்கவுந்தக்கதாகச் சுவிசேஷம்அறிவிக்கப்படுவதற்கு ஒத்தாசை செய்யும்படி எங்கள் எண்ணெய்யையும, கிழங்கையும விற்றுக் கொடுத்துக்கொண்டிருப்போமாக. நாங்கள் இந்த நம் கிரியையிலே தொய்ந்துபோகாதிருப்போமாக. இப்போதும் பெரிய சமுத்திரத்தைக் காண்கிறேம, அது சலத்தின் கீழேகரடுமுரடாய் இருக்கிறது. தண்ணீர் அதின்கீழிருக்கப்பட்ட ஒப்புவின்மையையும அழுக்கையும மறைத்துவிடாமல, மேலுக்கு எங்கும்செறிந்து, ஒப்புரவும்அழுத்தமுமாயிருக்கின்றது. அதுபோல எங்கள் தேசமும் முன்னே அமார்க்கமான செய்கைகளிலே காடுமுரடான தேசமாயிருந்தது. ஆனாலும் பாரபரனுடைய வார்த்தை அதை அழுத்தமாக்கிற்று. அனேக தேசங்கள் இப்பொழுது அமார்க்கமான நடத்தைகளினுலுங் கெட்ட பழக்கங்களினுலும் காடுமுரடாயிருக்கின்றன. தேவனுடைய வசனம்மாத்திரமே அதைத்தவிர

Digitized by Google

ழுத்தமாக்கித் துடைத்துப் போடக்கூடியது. சமுத்திரத்தின் க் கரடு முரடாயிருக்கப் பட்டயாவுந் தண்ணீராலே மேவுண்டு அ த்தமாய்க் காணப்படுகிறதுபோல உலகத்தின் முரட்டுத் தன்மை வுஞ் செம்மையாகுமட்டும் நாம்யாவரும் நற் கிரியைகளைச் செய் தற் சாக்கிரதை உள்ளவர்களாயிருப்போமாக. நாம் எல்லாவற்று ம் மேலாக நம்முடைய இருதயங்கள் இயேசுக்கிறிஸ்துவினுடை இரத்தத்தினாற் சழுவப்படும் படிக்கும் பராபரனை நமது சி ளிக னாகவும் இயேசுக் கிறிஸ்துவை நம்முடைய சகோதரனாகவும் வை துக்கொள்ளப் பிரயாசப்படவேண்டும்"

வேறொருவன் இவைகளைக் கேட்டதினால் அதிகமாய் மனம் ஏவப்ப டு எழும்பிச் சொல்லுகிறதாவது, "இப்போதும் (உருத்தர) திவாரி விக்கிரகங்களைப் பாருங்கள், அவைகளுக்குக் கிடக்கிற (ஒரேவென் பர்) எங்களுக்கு ஒன்றையும் படிப்பித்துவைக்கவில்லை. எங்கள் ம ாவிகளினதும், அவர்களுடுப்புக்களினதும் சிறப்பைப் பாருங்கள். ஹும் எங்கள் நிலைபரத்தையுங் காற்றினாலடிபட்டு எங்கள் தீவிற்சே த (உருத்தர) திவாரின் நிலைபரத்தையுமொத்துப்பார்த்து எங்க ரிருந்ததெவ்வளவு மேன்மையாயிருக்கிறதென்பதை அறியுங்க . இந்நிலைமையை நாம் எப்படி அடைந்தோம்? எங்கள் சொந்தப் பற பேற்றினாலா? அல்லவே. இவை எல்லாவற்றுக்கும் இயேசுக்கி ஸ்துவென்னப்பட்ட நாமமே மூலமாயிருக்கின்றது. அப்படியானு நாமத்தைத்தொட்டு மற்றவர்களும் நன்மையடையும்படி அவ ர மறுதேசத்தாருக்கு அறிவிப்பது எங்கள் கடனாயிருக்கின்றது. இ க் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகத்தாருக்கு அறிவிக்கும் வே க்குட்படுவதற்குத் தேவதூதர்களும் மிகுந்த விருப்புற்றிருப்பார்க ளன்று சொல்லிமுடித்தான்."

(உருத்தர) தீவிற் சம்பவித்த ஒரு காரியத்தினாலே கிறிஸ்துமார்க் ம் எவ்வளவுறுதியாய்த் திவாருடைய இருதயத்திற் பலன்கொண்டி ந்ததென்று தெரியவந்தது. கிறிஸ்துமார்க்கக் குருமாருக்கும் அதி ால மிகுந்த தயிரியமுண்டாயிற்று (கைப்பித்தான் (சேக்) என்னப் ட்ட ஒரு (அமரிக்க) கப்பற்காரன் தன் பிரயாணங்களிலே சில வளை இராயற்றரியாவிற்றங்கிப் போவார். அவர் எங்கள் தீவிற் க டசியாய்ச் சேர்ந்தவிடத்தில்லை தான் இந்தமுறை (அமரிக்கா) வுக் ப் போகையில் (உருத்தர) திவுக்குப்போய் அவ்விடத்திலுள்ள தே திப்பன கிழங்குவகைகளை ஏற்றிக்கொண்டு போகவேண்டுமெ ன்று சொல்லியிருந்தார். அப்படிப் போய்ச் சேர்ந்தவிடத்திலே அ ருடைய கப்பல தற்செயலாய்க் கற்பாரிற் பொறுத்தது.

உடனே அத்திவார தங்களாற் கூடிய ஒத்தாசைகளைச் செய்தார் ள். அதற்கு இந்தக் கைப்பித்தான் மிகுந்தநன்றி அறிந்ததுமல்லாம அவர் அந்தத் தீவைவிட்டுப் புறப்பட்டபொழுது பின்னுலெழுதியி க்கும் கடிதத்தை வரைந்து அவர்கள் உடபடியை அதில் அறிவித் ார்.

அவர் எழுதுகிறதாவது.

எங்கள் கப்பல் சேதப்பட்டநாள்முதல் இந்நாள்வரைக்கும் இத்தி வார் எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள். கப்பலில் இ ருந்து கரைக்குச் சரக்குகளை இறக்கினநாளிலே கரைக்கு ஒன்றரை ம யில் தூரத்திலே திவாருக்குப் பிறந்த குருவாய் அவ்விடத்திலே நிய மிக்கப்பட்டவொருவன் வசமாய்ச் சேர்த்துப் போடும்படி சரக்குகளை ப் பந்தித்துத் திவார்கையிற் கொடுத்து அனுப்பினேம்.

அனுப்பப்பட்ட இந்தச் சரக்குகளில அவர்கள் கொண்டுபோ கையில் திருடிக்கொள்ளக் கூடியதாயிருந்தும் அவர்கள் வசத்தில் அ னுப்பப்பட்ட சரக்குகளில் ஒருதுண்டுச் சீலையையாகுதல் பின்னொரு அற்பன் உடைமையையாகுதல அவர்கள் கவர்ந்து கொள்ளவில்லை. இதனால் அத்திவாருடைய காணியமும், சன்மார்க்கமும் எவ்வளவு பெ ரிய தென்பது எங்களுக்குத் தெரியவந்தது. கரையில் நானும் என் வேலைகாரனும் இறங்கியிருந்த காலத்தில் அத்திவாரால் சொல்லி மு டியாத அளவாகப் பராபரிக்கப்பட்டோம். இதற்காக என்றைக் கும் நன்றியுள்ளவனாகவிருப்பேன். நானும் என்வேலை காரனும் (பூ ரு) என்னப்பட்டவன் வீட்டிலிருந்த போது அவனும் அவன்மனை வியும் எங்களுக்கு வேண்டிய வெல்லாந்தந்து மிகவுங் கவனமாய்ப் ப ராபரித்தார்கள். அதற்காக நான் மிகுந்தமனப் பூரணமான நன்றி யறிதலுடனே உபகாரஞ் சொல்லுகிறேன். இதல்லாமல் உங்கள் நன்றிக்கு நான் இப்பொழுது யாதொரு உபகாரஞ் செய்யத் திரா ணியில்லாதவனாய் இருக்கிறேன்.

இப்படிக்கு. வி. சேக.

[இன்னும வரும்.]

திண்டிக்கல் கிறிஸ்தவர்களின் சுவிசேஷ சங்கம்.

[Anniversary of the Evangelical Society at Dindigal.]

இச்சங்கத்தின் இரண்டாம் வருடாந்தக் கூட்டம் இம் மீ௨௪ தீ திண்டிக்கல்லிற் கூடப்பட்டது,

சங்கத்தலைவனாகிய பிருன்சிஸ் அஸ்பெரி யென்பவர் கூட்டத்தை நடப்பித்தார். கனம்பொருந்திய லாறன்ஸ் ஐயர் அவர்கள் செபம் பண்ணிக் கூட்டந் தொடங்கினதின்மேற், சென்றவருடச் சங்கதிக ளைப்பற்றி அறிவிக்கும்படி எழுத்துக்காரியஸ்தராகிய.நைமன் உபதே சியார் பல அலுவலைப்பற்றிக் கூட்டத்தில் வராதபடியால், சங்கத் தாரின் சம்மதியின்பேரில், சூசையாபிள்ளை என்பவர் எழுத்துக்காரி யஸ்தராய் நியமிக்கப்பட்டார்.

மேற்சொல்லப்பட்ட அஸ்பெரியென்பவர், சங்கத்தின் வரவு செ லவுக் கணக்குகளை வாசித்தார். அதினாலே சங்கத்தார் சென்றவருட த்தில் (௨௱.) சொச்சம் ரூபாய் அல்லது (௨0) பவுண் சேகரித்துக் கொண்டதாய் மிகவுஞ் சந்தோஷத்துடன் அறியவந்தது.

இச்சங்கத்தார் (௭0) பிள்ளைகளுள்ள இரண்டு தமிழ்ப்பள்ளிக்கூட ங்களைத் தாபரித்து வருகிறார்கள். மூன்னும், ஒரு உபதேசியை ஐந்து மாதமும், பதினைந்து நாளுந் தாபரித்து வந்ததின் பேரில் மேற்சொ ல்லப்பட்ட உபதேசி சங்கத்தாருடைய உத்தரவின்றிப் பலவிடங்க ளுக்குப் போய்விட்டதினாலே இதுமுதலத் தள்ளப்பட்டிருக்கிறார்.

கனம்பொருந்திய லாறன்ஸ் ஐயரவர்கள் அமரிக்கா நாட்டிற் போ ஸ்டன் பட்டணத்திற் தாய்ச்சங்கத்தைப்பற்றி அநேகவிசேஷங்களை ச்சொன்னார். கொஞ்சமான துவக்கங்களின் நாளையார் அசட்டைப ண்ணலாம் என்ற வசனத்தின்பேரிற் சங்கத்தலைவனால் ஒரு பிரசங்க முஞ் செய்யப்பட்டது.

வேதகிரிமுதலியார் என்பவர், இச்சங்கத்தாரை அதிக முயற்சியா க்கும்படி, நாலடியாரில்,

> உறக்குந் துணையதோராலம்வித்தீண்டி,
> இறப்பநிழற்பயந்தாங் கறப்பயனுந்,
> தான்சிறிதாயினுந்தக்கார்கைப்பட்டக்கால்,
> வான்சிறிதாப்போர்த்துவிடும்.

என்னும் பாட்டின் பேரிற் பிரசங்கஞ் செய்தார்.

சங்கத்தாரில் அநேகர் மிசியோன் சம்பளகாரரானதினாலே மிசி யோன் வேலையை விடும்பொழுது இச்சிறு குழந்தைச் சங்கத்தையு ம் இரக்கமின்றி ஒருவேளை விட்டு விடுவார்களென்று பயந்து ஸ்ருங் உபதேசியார் சங்கத்தார் மிசியோன் அலுவலை விடும்பொழுது தங் கள் பிள்ளைகளையாவது, அற்பவெற்றிலை புகையிலையையாவது விட மாட்டார்களேயானால் சங்கத்தை மாத்திரம் விடுவது நியாயமல்ல வென்பதைப்பற்றி அதிகமாய்ப் பேசினார்.

சங்கத்தாரில் முன்னொரு அணா கொடுத்துவந்த உவாத்திமார் இனி மேல் (௧௨) அணாக்கொடுக்கத் தீர்மானித்தார்கள். அத்தருணத்தில் சங்கத்தின் பேரில் ஒருவர் பாடிய சிலபாட்டுகளும் அரங்கேற்றப்ப ட்டன.

அவையாவன,

நேரிசைவெண்பா.

> பூங்காவிலோர்மரத்திற்கண்டபவம்போக்கிடவே,
> தூங்கிடையோர்மரத்திற்றுஞ்சியே பாங்குடனே,
> துங்கமறைமேற்றவழுந் தூயசுவிசேஷ,
> சங்கமிதிலவர்தருளைத்தா.

ஒற்றைத்தருச்சிந்து.

சங்கம்வாழி சுவிசேஷ சங்கம்வாழி.

> திங்கள்பருதியுடு மங்குலவனியொடு சேருமதலமறை நேரும்பரனு ர்மறைச், சங்கம்
> பங்கச்சமயவாதம் மங்கச்செய்தவன் பாதம் பலரும்பணியப் போதம இலகுஞ்சத்தியவேதம் எங்கும்பெருமையொங்கத்து ங்கமிகவேதங்க, இகமும் பரமுமெய்ய, எவருந் தருமஞ்செய் ய. சங்கம்.

கட்டளைக்கலித்துறை.

> வானோபரனின்வலமோமகத்துவமாதிவஞ்சி
> யோனோவடியவருள்ளங்கொலோவன்புடையவிராத்
> திறே ஒலிவமலையோமலையிடைச்செப்புமறை
> தானோபரகுருவேதெரித்திடச்சங்கமிதே.

மேலெழுதியவைகளைப் பாடினதின் பின் மறுபடியுஞ் செபம்பண் ணிக் கூட்டம் முடிந்தது.

Digitized by Google

[On the unchristian conduct of Roman Priests]

முகாமைக்காரரே,

* எங்கள் உரோமான் சத்தியவேதம் உண்மையானதென்றும், அந்த வேதத்தின் மேரையாய் நடப்பவர்கள் சதாகால இடேற்றத்தை அடைவார்களென்றும், நாங்கள் முழுமனதோடும் நம்பி விசுவாசிக்கிறோம் ஆனாலும் எங்கள் குருமார்செய்கிற காரியங்கள் எங்களாலே பொறுத்துக்கொள்ளக் கூடாது. என்னவானால் மனுஷசாதி இடேற்றம்பொருட்டுச் சருவேசுரன் வேதாகம விவிலியவென்னும் புத்தகமொன்றை அருளிச்செய்திருக்க, அந்த விவிலியவை எங்களுக்குப் போதிக்கிறார்களில்லை. அதை எங்களுக்குப் பாஷைப்படுத்தி அச்சடிப்பித்துத்தருகிறார்களுமில்லை. அப்படிச்செய்தால் பணஞ்செலவழிந்துபோமென்று பார்க்கிறார்கள். எங்கள் ஊர்களில் இருந்து பணங்களைச்சேர்த்துக் கட்டித் திரட்டிக் கோவைக்கு அனுப்பிப்போடுகிறார்கள். கோவறணமேந்தார்தானும் ஊரிலே வரிவாங்குகிற பணங்களைக்கொண்டு சம்பளகாரரைவைத்தும்,வீடுகள்,தெருக்கள் கட்டியும், தருமப் பள்ளிக்கூடங்களைவைத்தும், மறுபடியும் இந்த ஊருக்குள்ளேதானே செலவிடுகிறார்கள். இதிலும் அதிகமாக றப்பிறமாதுப் பாதிரிமார் இந்த ஊருக்குள்ளே ஒரு சல்லியும் வரவுபண்ணாமல் தங்கள் ஊர்ப்பணத்தைத் தருமமாய் இந்த ஊருக்குள்ளே செலவிடுகிறார்கள். ஆனாலும் எங்கள் குருமாரோ எங்கள் ஊர்களிலுள்ள பணங்களை வாரி ஒரு சல்லியும் இந்த ஊருக்குள்ளே போகவிடாமற் கோவைக்கு அனுப்பிப்போடுகிறார்கள். இதினாலே இவர்கள் பணஞ் சம்பாதிக்கவந்ததல்லாமல் எங்களை இடேற்றவந்ததாய்க்காணவில்லை. நாங்கள் எங்கள் விவிலியவை அறயச்சோட்டைப்பட்டுப் பாதிரிமாருடைய புத்தகங்களை வாங்கி வாசித்தாலும் எங்களைக் கோபித்துத் திருச்சபையாலே தள்ளுகிறார்கள். விவிலியவை விளங்குகிறதற்கு எங்களுக்குப் புத்திபோதாதென்கிறார்கள். பின்னை வேதம் எங்களுக்காக உண்டுபடவில்லைப்போலும். விவிலியவை வாசித்தால் மறு வேதத்திலே போய்விடுவோமென்று பயப்படுகிறார்கள். அதினாலே அவர்கள் போதிக்கிறது வேதத்துக்கு விரோதமாயிருக்கும் போலும். எங்கள் பிள்ளைகள் படிக்கிறதற்கு ஒரு பள்ளிக்கூடமாகுதல் வைக்கிறார்களில்லை. கோவறணமேந்தாரும் றப்பிறமாதுப் பாதிரிமாரும், அநேகபள்ளிக் கூடங்களை வைத்து எங்கள் பிள்ளைகளைப் படிப்பித்துச் சங்கைக்காரரும், யோக்கியவான்களுமாக்கி நன்மை செய்ய, எங்கள் குருமாரோ எங்கள் பணத்தையும் வாங்கிக்கொண்டு தங்கள் ஊருக்கு அனுப்புகிறதேயல்லாமல் எங்களுக்கு நன்மைசெய்யவில்லை. மறுபள்ளிக்கூடங்களில் எங்கள் பிள்ளைகளைப் படிக்கவிட்டாலும் அதுவும்அவர்களுடைய கண்ணுக்குள்ளே குத்துகிறதாய் இருக்கின்றது. ஐயோ! இதுமுறையோ! இதுமுறையோ? ஒரு தாய் பசியாயிருக்கிற தனது பிள்ளைக்குத் தானுந் தின்கொடாள். பிறர் கொடுக்கவும் விடாள். இந்த அநீதம் எங்கே நடக்கும்? மறுசமயக்காருடைய பிள்ளைகள் பலபல சாஸ்திரங்களையுமபடித்து இம்மை மறுமைக்குரிய பலன்களை அடைய,எங்கள் பிள்ளைகளோ படிப்பற்றுப்பாழ்பட்டுப்போகிறதே எங்கள் வேதத்தினாலே வந்த பலன். எங்களுக்கு இந்த அநீதம் எங்கேயெடாவந்தது! எங்கள் வேதத்திற்சேர்ந்திருந்த சிலசில பிள்ளைகள் குருமார் சொல்லைத் தட்டிப்போட்டுப் பாதிரிமாருடைய பள்ளிகளிற் படித்துக் கோடுகளில் முதலிமாராகவும், உவாத்திமாராகவும். பெரியபெரிய உத்தியோகங்களில் இருந்து பெயரெடுக்க,எங்கள் பிள்ளைகள் தெருவழியே திரிந்து மக்கரிக்கின்றதே. ஐயோ! இதுமுறையோ! இதுமுறையோ? நாங்கள் எந்த உயர்ந்த சாதியாயிருந்தாலும், எந்த உத்தியோகத்தில் இருந்தாலும், எந்த வயதுபோந்த கிழவராயிருந்தாலும், பிள்ளைப்பெறாத பொடிகளாயிருக்கிற குருமார்தானும் நாங்கள் கறுத்தவர்களாய இருக்கிறபடியால் எங்களை எளியசாதியாக்கி அடேயென்றும் எடேயென்றும் பேசுகிறார்கள். அது குருத்துவமுறையானாற் சட்டைபோட்ட வெள்ளைக்காரரை அப்படிப் பேசாமல சரி கதிரைகொடுக்கிறதென்ன? எங்கள் சிறைகுட்டிகளில் எத்தனைபெயர் சட்டைபோட்டு வெள்ளைக்காரராய்விட்டார்கள். அவர்களுக்குக் கதிரை, எங்களுக்கு அடா எடே என்பதே எங்கள் வேதத்தின் பலன். எங்களை எங்கள் முகம் அவர்கள் காலிலடிபட விழுந்து சுவாமியென்று முத்திசெய்யப்பண்ணி அவர்களுக்குக் கைகொடுத்துக் குலுக்கிறார்கள். நாங்கள் ஆண்டவருடைய பெயரை வைத்துச் சுவாமியென்று கூப்பிட வெள்ளைக்காரன் குருமாருடையபெயர் சொல்லிக் கூப்பிடுகிறான். இப்படித்தான் நாங்க
ள் மெத்த எழியசாதியும் கூட்டற்ற படைப்புமாய்ப்போனோ
ருவேசுரா! இதினாலேதானே வெகு சங்கைக்காரர் வேதத்தைவிட்
றப்பிறமாதிலே போய்விட்டார்கள். அதற்குச்சாட்சி அவர்களு
ய பெண்டுகள் இன்னும் எங்கள் வேதத்திலே இருக்கிறார்கள்.
மைக்காரரே, தயவுபண்ணி நீங்கள், இன்னும் இத்துடனே எழு
ங்கள் உதயதாரகைப் பத்திரத்திலே அச்சடிப்பிக்கும் படி கே
கொள்ளுகிறேன். இப்படிக்கு பிலிப்பு பக்கோ.

இயாழ்ப்பாணம் ஆனி ௨௰ தி.

*இதை எழுதியவர் உரோமான் சத்தியவேதத்திற்கும், றப்பிறமாது என்று தான்சொல்லும் வேதத்திற்குமுள்ள வித்தியாசம் யாதெனக்காட்டுவாரா?

முகாமைக்காரர் வசனம்.

மேறசொல்லப்பட்ட காரியங்களைப்பார்க்குமிடத்தில் நல்ல
ள் எவர்களும் உரோமான் மார்க்கத்தாருக்காகத் துக்கப்படவுங்
லைப்படவும் வேண்டியதாய் இருக்கின்றது. இயாழ்ப்பாணம்வரு
சீக்கிரத்திற் சீர்திருந்திவருகிறதில் உரோமான் மார்க்கத்தவர்களு
ய பிள்ளைகளிற் குருமாருடைய கட்டுக்குள் நிற்பவர்கள்மாத்திரப
வரக் கீழேபோறார்கள். ஏனெனில் அவர்கள் தமிழருடைய நூல்
யாவது. தங்கள் விவிலியவையாவது,பாதிரிமாரிடத்தில் இங்கிலீச
ஷையையாவது, படிக்கப்படாதென்று அறுக்கைபண்ணியிருப்
றால் அவர்கள் வெகு நட்டமடைகிறார்கள். உற்றுப்பார்க்குமிடத்தி
வர்கள் படிக்கவேண்டிய பாஷையுமில்லை, நூலுமில்லை. உரோ
மார்க்கத்துக்கு அத்திபாரம் அறியாமையென மறு ஊர்களி
நடந்துவருகிறதுபோல இங்கேயுங் காண்கிறோம். நல்லவர்கள்
வாளிகள் எங்கள் சகோதரரும் அயலகத்தாருமாகிய உரோமா
ர்க்கத்தாருக்கு நன்மைசெய்யப் பிரயாசப்பட அவர்கள் சிறி எதிர்
த் தற்கித்துப் புத்தியீனத்தினாலே குருமாரோடே ஒத்துக்கொ
போகப்பார்க்கிறார்கள். ஐயோ! இது பெரியமோசம். ஆர் என்ன
யக்கூடும்? ஆண்டவர் அவர்களுக்கு நன்மனசைக் கொடுப்பா

பஞ்ச தந்திரக் கதை.

மித்திரபேத தந்திரம், ௱௭ம். பக்கத்தினின்று.

ஒரு பெரிய குளத்தில் வருமுன்காப்பவனென்றும், வருங்கா
ப்பவனென்றும், வந்தபின் காப்பவனென்றும் மூன்று மீன்கள்
க நாளாய் வாழ்ந்திருக்கும் நாளில் ஒரு நாள், வலைக்காரர் வந்
திலே தண்ணீர் கொஞ்சமாயிருக்கிறதாகையால் நாளை வந்து இ
ள்ள மீன்களை எல்லாம் பிடிப்போமென்று பேசிக்கொண்டதை
முன்காப்பவன் கேட்டுத் தன் சினேகிதரிடத்திற் போய், நாம் இ
டம் விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்படவேண்டும். இனி இங்கே ஒ
மிஷ நேரமும் இருக்கலாகாதென, இதைக் கேட்டு வருங்காற்கா
வன் சொல்லுகிறது, நமக்கு விபத்து வரும்போது பார்த்துக்கொ
ளுவோம். காரியம் நேரிடும்போது அதற்குத்தக்கதாகப் புத்தி உ
ண்டாகுமெனப், பிறகு வந்தபின்காப்பவன் சொன்னது, தன் இடத்
விட்டுவிடுகிறதுதான் மூர்க்கத்தனம். ஏனென்றால், எது வரத்தக்க
அது வரவே வரும், யாதொன்று வரத் தகாததோ அதை நாம்
தி அழைத்தாலும் வாராது. ஆதலால் நான் வரமாட்டேனெ
சொல்லி அந்தக்குளத்திலே இருந்தது. பிறகு வருமுன்காப்பவன்
றிடத்திற்குப் போய்விட்டது. மறு நாள் உதயத்தில் வலைக்கார
ந்து வலை எறிந்து மீன்களைப் பிடித்தார்கள். அதில் வருங்காற்க
பவன் அகப்பட்டுச் செத்தாற்போற் பாசாங்குபண்ணிக்கொண்
ந்தது. அதைப் பார்த்து இது செத்ததென்றெண்ணிக்கொண்
லைக்காரன் அதைக் கரைமேற் போட்டுவைத்தான். இதற்குள்ளே
து அவன் கண்ணுக்குத் தப்பித் தண்ணீரில் ஒளித்துக்கொண்ட
பிறகு வந்தபின்காப்பவன் வலைக்குள் அகப்பட்டு இப்போதெ
செய்யலாமென்று அங்கும் இங்கும் ஓட, அதை வலைக்காரன் க
தடியால் அடித்துக் கொன்றான். மற்றிரண்டுஞ் சுகமடைந்தன.
கையால் எதையும் ஆலோசித்துச் செய்யவேண்டுமென்று சொ
ப் பிறகு, புருஷன் சொற்படி அங்கேதான் முட்டையிட்டது.
போது சமுத்திரம், தன் வல்லமையை அறியாமல் முட்டைகளை
த்துக்கொண்டுபோயிற்று. சிட்டு அதைப் பார்த்து வெகு து
மாய்ச் சேவலுடனே சொல்லுகிறது, சுவாமி, தங்களுக்குப் பெ
சங்கடம் வந்தது. ஏனென்றால் முட்டைகளைச் சமுத்திரங் கொ
டுபோயிற்று. இப்போதென்ன செய்யலாமென, சேவல் நீ பயப்ப
தே. நான் முட்டையைக்கொண்டு வருவேன் என் திராணியைப்
ரென்று சொல்லி எல்லாப் பறவைகளையுங் கூட்டமாய்க் கூட்டிக்கொ
ண்டு கருடனைச் சரணமடைந்தது. கருடன் அதை விட்டுணுவுக்கு
றிவித்தப்பறவை மிகவும் வருத்தப்படுகிறது ஆகையால் இதன் மு
ட்டைகளைக் கொடுப்பிக்கவேண்டுமென, விட்டுணு சமுத்திரத்தைப்
ர்த்து இதன் முட்டைகளைச் சீக்கிரமாய்க்கொடு என்று கட்டளையிட்

Digitized by Google

டனே சமுத்திரம் முட்டைகளைக் கொண்டுவந்து கொடுத்தது. ஆ யாற் சத்துருக்களுடைய பராக்கிரமம் அறியாமற் பகைத்துக் காள்ளலாகாது. ஆனாலும் அது அந்தச் சிங்கத்திற்கு அகங்காரத்தி லே தெரியவில்லையெனக் கேட்டு சஞ்சீவகன் தமனகனைப் பார்த்து ந லது அந்தச் சிங்கத்தின் சண்டைக்குறிப்பு எப்படி இருக்குஞ் சொ லென, தமனகன் சொல்லுகிறது. [இன்னும் வரும்.]

PANCHA-TANTRA-KATEI.

[A Translation &c.—Continued from page 107.]

There lived in a large pond three fishes by the names of Varoomuncatpone, arooncatcatpone, and Vanderpincatpone. One day there came some fishermen and said among themselves that as the pond was then shallow, they would me to-morrow and catch all the fishes in the pond. Hearing this the fish Vaomuncatpone addressed his friends as follows:

"We should quickly quit this place; we should not stay here a minute long-." Upon this, the fish Varooncatcatpone replied, "We will take heed when nger overtakes us. When any evil comes upon us we shall have sense to eet it." The fish Vanderpincatpone said, "It is foolish for one to quit his ade; for whatever is destined to happen, will surely come to pass, but whatever not, will never come to pass though we trouble ourselves and solicit it, I ill not therefore go with you." So saying, he stayed in the pond. But Vaomuncatpone went to another place.

The next morning, the fishermen came, cast their nets, and caught the fishs. In this draught, was caught Varooncatcatpone, who pretended to be ead. The fishermen thinking he was dead threw him on the shore, and left im. In the mean time the fish escaped and hid himself in the water. Afterards the fish Vanderpincatpone having been caught in the net, ran to and fro, aying, what is this? The fisherman seeing this struck him with a stick and killd him. The other two saved their lives.

Therefore said the female bird, "Every thing ought to be done with circumspection," and she laid her eggs there. Then the sea, not knowing the bility of the bird swept the eggs off with its waves.

The female bird, seeing this, addressed the male with sorrow.

"My lord, a great disaster has happened to you; the sea has carried away ll the eggs. What shall now be done?"

"Fear not," said the male, "I will restore to you the eggs. Witness my ability." So saying, he gathered all the winged tribes and went to Karuda and olicited protection.

Upon this, Karuda represented the case to Vishnu and entreated him to relieve the distress of the bird by causing the eggs to be restored. Vishnu then commanded the sea to deliver the eggs, and the sea obeyed accordingly.

Therefore, it is not wise to occasion enmity without knowing the power of the enemy.

Sanjevakan, hearing that the Lion did not understand this, owing to his self-conceit, asked Tamanakan, what were the indications of battle in the Lion; to which Tamanakan thus replied. [To be continued.]

[Brief descriptions of the most remarkable animals that inhabit the earth, illustrated by cuts on a comparative scale.]

யானையைப்பற்றியது.—The Elephant.

